க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2013
# பத்தாம் வகுப்பு தமிழ் முதல் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – I

**பகுதி – 1 :**

01. ஆ. குறள் 02. இ. பாரதியார் 03. ஆ. ஆறு
04. இ. சொத்துரிமை 05. ஆ. பாரதரத்னா 06. இ. பேச்சுக்கலை

**பகுதி – 2 :**

07. நெற்கதிர் 08. பெரியபுராணம் 09. வரப்புகளாக
10. வேடிக்கையாக 11. தொங்குதல் 12. சிரவண பிதுர்பத்தி

**பகுதி – 3 :**

13. இந்து - நிலவு
14. கான் - காடு
15. பணை - மூங்கில்
16. செத்தை - குப்பை கூளம்

**பகுதி – 4 :** (17 முதல் 20 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம்)

17. இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் எத்தனை?
18. தமிழர்கள் எந்தெந்த நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
19. (இராமலிங்கர்) சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை எங்கு நிறுவினார்?
20. எங்கு / எதில் பயில்வோருக்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன?

## பிரிவு – II – பகுதி – 1

21. என்றும் இடும்பை தருவது தீயொழுக்கம் ஆகும்

22. 
- ஏலாதி பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- எண்பத்தொரு வெண்பாக்களால் ஆன நூல் ஆகும்.
- ஏலாதி = ஏலம் + ஆதி. ஏலம் என்னும் மருந்துப் பொருளை முதன்மையாகக் கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர். இம்மருந்து உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும். அதுபோல இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும்.

23. அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.

24. 
- குகன் விரைந்து வந்து இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான்
- இருள் போன்ற நீண்ட முடியுடைய தலை, மண்ணில் படியக் கீழே விழுந்து வணங்கினான்.
- பின் எழுந்து, வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக நின்றான்.

25. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

26. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது பொருள் என்னும் செல்வமாகும்.

27. பண்பு எனப்படுவது சான்றோர் வழி அறிந்து நடத்தலாகும்.

## பகுதி – 2

28. ஒரு மொழிப் படத்தை மற்றொரு மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு, மொழி மாற்றம் என்று பெயர்.

29. ✷ இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ்
- ✷ அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தது தமிழ்
- ✷ பழமையும் பெருமையும் வாய்ந்தது
- ✷ இறவாத இலக்கிய, இலக்கண வளங்களைக் கொண்டது தமிழ்
- ✷ தனிநோக்கும், போக்கும் கொண்டது தமிழ்

30. உண்ட உணவு, செரிந்த பின்னர் உண்பவர்க்கு நோயே ஏற்படாது என்று மருந்தில்லா மருத்துவம் பற்றி திருவள்ளுவர்,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் - என்னும் குறள் வழி கூறுகிறார்.

31. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி

32. அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை

33. இராமலிங்கர் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் 05.10.1823இல் பிறந்தார்

34. ஒவ்வொருவரும் குறைந்தது மேனிலைக் கல்வித் தேர்ச்சியினை கல்வித் தகுதியாகப் பெறுதல் வேண்டும்

## பிரிவு – III – பகுதி – 1

35. ✷ வெற்றி தரும் வேலினைத் தன் பெரிய கையில் ஏந்தி பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை ஏறிய கொற்றவையும் அல்லள்;
- ✷ கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்;
- ✷ இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்;
- ✷ அச்சம் தரும் காட்டை தான் விரும்பும் இடமாகக் கொண்ட காளியும் அல்லள்;
- ✷ தாருகன் என்ற அசுரனின் மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்;
- ✷ தன் கையில் பொற்சிலம்பொன்றை ஏந்தி சினம் கொண்டு, கணவனை இழந்த அப்பெண் நம் வாயிலின் முன் நிற்கிறாள் என்று வாயிற்காவலன் கண்ணகி குறித்து கூறினான்.

36. ✷ குகன் நம் மீது கொண்ட அன்பினால் கொண்டு வந்த பொருட்கள் சிறப்புடையன
- ✷ அமுதத்தை விடச் சிறந்தன
- ✷ தூய்மையானவை
- ✷ என் போன்றோர்க்கு உரியன
- ✷ ஆதலால் இனிமையான இப்பொருள்கள் நாம் விரும்பி உண்டதற்கு சமம் என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினான்.

37. சான்றோர் ஒருவருக்கொருவர் தொலைவில் இருந்தாலும் தக்க சமயத்தில் ஒன்று சேர்வர். இதற்கு உவமையாய் மண்ணுக்கடியில் உள்ள பொன்னும், ஆழ்கடலில் கிட்டும் முத்தும் பவளமும், மலையில் கிட்டும் மணியும் ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்து மாலையாய் (அணிகலன்) அமைவது கூறப்படுகிறது.

38. ✷ முகமது நபி மகிழ்ச்சியுடன் பாதையில் நடந்து வருவதைக் கண்ட புலி,
- ✷ தனது வாலை வளைத்துக் கொண்டது
- ✷ பெரிய தலையைத் தாழ்த்தியது
- ✷ உடல் நடுக்கமுற்று மெல்ல மெல்ல நடந்து வந்தது
- ✷ குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் திருவடிக் காட்சி கிடைத்ததென்று, பணிந்து வணங்கியது.

39. செடியின் இலட்சியம், நல்ல பூவினைத் தோற்றுவித்தல். அப்பூவினை வெளிப்படுத்தும் வரை அச்செடி இளைப்பாறுவதில்லை. அது போல, இலட்சியத்தை நெருங்கும் வரை, இடையில் ஏற்படும் இடையூறுகளையோ, தடைகளையோ கண்டு தயக்கம் காட்டக் கூடாது. இளைப்பாற எண்ணி நேரத்தை வீணாக்கக் கூடாது. இவற்றையெல்லாம் தவிர்த்து, தொய்வின்றித் தொடர்ந்து முயன்றால் சாதனைப் பூக்களை அடைய முடியும் என்று சாலை. இளந்திரையன் கூறுகிறார்

**பகுதி – 2**

40. ✸ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை
- ✸ ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்
- ✸ பெண்கள் அடிமைகளாய் இராமல் சமுதாயத்திற்கு தொண்டாற்றுபவர்களாகத் திகழ வேண்டும்
- ✸ பெண்கள் சொத்துரிமை பெற போராட வேண்டும்.
- ✸ பெண்கள் புத்துலகு படைக்க வேண்டும்.

41. ✸ பேச்சின் தொடக்கம் நன்றாக இருக்க வேண்டும்
- ✸ அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேச்சைத் தொடங்க வேண்டும்
- ✸ பேசத் தொடங்கிய ஓரிரு மணித் துளிகளில் பேசப் போகும் பொருளில் புகுந்து விடுதல் நல்லது.
- ✸ தட்டுத் தடங்கலின்றிப் பேச தொடக்கமே அடித்தளமாகும்
- ✸ கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்க வேண்டும்.

42. ✸ தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு என்ற பொருள் கொண்ட குஜராத்திப் பாடல் காந்தியடிகளின் மனதில் இன்னா செய்யாமை என்னும் கருத்தினை ஆழமாக விதைத்தது.
- ✸ தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய போராட்டத்தின் விளைவாக ஸ்மட்ஸ் என்ற ஆங்கில ஆளுநர் அவரை சிறையில் அடைத்தார். சிறையில் காந்தியடிகள் செருப்புத் தைத்தார். முதல் இணைச் செருப்பே சிறப்பாக அமைந்தது. அவற்றை அவர் அந்த ஆங்கில ஆளுநருக்கே அன்பளிப்பாக அளித்தார். இதன் மூலம் இன்னா செய்யாமையை தன் வாழ்விலும் கடைப்பிடித்தார் காந்தியடிகள்

43. ✸ பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்
- ✸ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறது திருக்குறள்
- ✸ தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர்
- ✸ உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் போற்றப்படுகிறது
- ✸ உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டது
- ✸ மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

44. ✸ 908இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு
- ✸ 1912இல் மும்பை எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்
- ✸ 1915இல் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்
- ✸ 1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம்
- ✸ இலண்டனில் அறிவியலில் முதுகலைப் பட்டம், பாரிஸ்டர் பட்டம்

இவையே அம்பேத்கரின் கல்வித் தகுதிகள் ஆகும்.

**பிரிவு – IV** 45. அ. தமிழ் விடு தூது ஆ. முத்தமிழ: - இயல், இசை, நாடகம்

இ. தி**த்**திக்கும், மு**த்**திக் கனியே, உ**ண்**ணப்படுந்தேனே, வி**ண்**ணப்பம்

ஈ. உன்னோடு + உவந்து + உரைக்கும் உ. சொல்வதைக் கேள்

46. அ. கடல் வாணிகத்தில் சிறந்திருந்தவர் தமிழர் ஆ. பொன், மணி, முத்து, துகில் (ஆடை)

இ. கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஈ. யானைத் தந்தம், மயில்தோகை, வாசனைப் பொருள்கள்

உ. கடல் வாணிகம்

**பிரிவு – V பகுதி – 1**

***(47 - 48 பத்து வரி நெடுவினாக்கள் - ஒரு வினாவுக்கான விடைக்கு 8 மதிப்பெண்கள்)***

**பகுதி – 2**

49. அ. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

ஆ. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,
கெடுப்பார் இலானுங் கெடும்

இ. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாஎன்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே

க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி– திருக்குவளை, நாகை மாவட்டம் – 610 204.
தொடர்புக்கு... 7598868760, 9524302724.
மின்னஞ்சல்: srinithicomputerstvr@gmail.com, nagarajangnsn@gmail.com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2013
# பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்புகள்

## பிரிவு – 1 – பகுதி – 1

01. ஈ. ஐகாரக்குறுக்கம்
02. ஆ. வைகை
03. ஈ. கதிர்வேல் வெற்றிலை தின்றான்
04. இ. இந்திரன்
05. ஆ. ஏகாரத்தில்

## பகுதி – 2

6. இரட்டுறமொழிதல்
07. உற்றது உரைத்தல்
08. வாகைப்
09. உறழ
10. மேனாடு (அ) மேல்நாடு

## பகுதி – 3

11. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது. எ.கா. கடகட, தடதட, சடசட, படபட
12. படித்த
13. என்னே! குறிஞ்சித் தேனின் சுவை!.
14. இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்ற**ன**
15. கை**த்**தொழில் ஒன்றை**க்** கற்று**க்** கொள்
16. இவ்வழியில் புனிதப்பயணம் செல்லுங்கள்
17. மிளகாய் வற்றல் கிலோ என்ன விலை?
18. சட்டத்தை மதிப்போம்; குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.
19. நான்மறை - ரிக், யசூர், சாமம், அதர்வணம்
20. சீட்டு கிழிந்து விட்டது - பணியிலிருந்து நீக்கப்பட்டான் (அ) வேலையிலிருந்து நீக்கப்பட்டான்

## பிரிவு – 2 – பகுதி – 1

21. மகிழ்ந்தான் - மகிழ் +த்(ந்) +த் + ஆன்
    - மகிழ் - பகுதி,
    - த் - சந்தி. த்-ந் ஆனது விகாரம்.
    - த் - இறந்தகால இடைநிலை,
    - ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி
22. மொழிக்கு முதலில் வரும் ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாக குறைந்து ஒலிக்கும் இதுவே ஔகாரக் குறுக்கம் ஆகும். எ.கா. ஔவையார், வௌவால்
23. கருமை + குயில் - கரு + குயில் - ஈறு போதல் விதிப்படி மை கெட்டது.
    - கருங்குயில் - இனமிகல் விதிப்படி ககரத்திற்கு இனமான மெல்லெழுத்து ங் மிகுந்தது.
24. வினா ஆறு வகைப்படும். அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா.
25. அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள் நிலைக்கும், செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும். எ.கா. போ போ, வருக வருக.
26. முல்லை நிலத்திற்குரிய நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்.
    பெரும்பொழுது : கார்காலம். சிறுபொழுது: மாலை

27. பாடாண்திணை = பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண்மகனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது. பாடாண்திணை ஆகும்.

## பிரிவு – 3 – பகுதி – 1

28. வெண்பாவின் இலக்கணம்:

ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்

இயற்சீர், வெண்சீர் வரும். பிற சீர்கள் வாரா

இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வரும். பிற தளைகள் வாரா

ஈற்றடியின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும்

செப்பலோசை பெற்று வரும்

இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை வரும்

29. இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி சொற்பொருள் பின்வருநிலையணி.

செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி.

இப்பாடலில், தீய என்னும் சொல் தீமை என்னும் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளது. (அல்லது)

புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

இக்குறட்பாவில் தீயவர்களைத் தேவர்களுக்கு இணையாகப் புகழ்ந்து கூறுவதுப் போலக் கூறித் தீயவர்கள் தம் மனம் போக்கில் தீய செயல்களைச் செய்து அழிவார்கள் எனப் பழித்துக் கூறபட்டுள்ளது.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர் - சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென் முன்

இப்பாடலில், திருப்பாற்கடலைக் கடைந்த போது உண்டான நஞ்சினைச் சிவபெருமான் உண்டார் என்பது புராணக்கதை. இதனைக் காளமேகப் புலவர் ஒருவன் கல்லால்அடித்ததற்காகவும், மற்றொருவன் காலால் உதைத்ததற்காகவும் வெட்கப்பட்டு இறைவன் நஞ்சினை உண்டான் எனப் பழிப்பது போலப் புகழ்ந்துள்ளார்.

30.

| | | | | |
|---|---|---|---|---|
| ஊக் / கம் | - | நேர் நேர் | - | தேமா |
| உடை / யான் | - | நிரை நேர் | - | புளிமா |
| ஒடுக் / கம் | - | நிரை நேர் | - | புளிமா |
| பொரு / தகர் | - | நிரை நிரை | - | கருவிளம் |
| தாக் / கற் / குப் | - | நேர் நேர் நேர் | - | தேமாங்காய் |
| பே / ருந் | - | நேர் நேர் | - | தேமா |
| தகைத் /து | - | நிரை நேர் (நிரைபு) | - | பிறப்பு |

## பகுதி – 2

(31 – 33 துணைப்பாட வினாக்கள் – அரைப்பக்க அளவில் விடை – ஒரு வினாவுக்கான விடைக்கு5 மதிப்பெண்கள்)

## பகுதி – 3

34 அ. சுரேஷ், என்ன நடந்தது? ஏன் தாமதமாக வருகிறாய்? வழியில் போக்குவரத்து நெரிசல். அதனால்தான் காலதாமதம். சரி சரி. பேருந்து எத்தனை மணிக்கு வரும்? பயணச்சீட்டு கிடைத்ததா? பேருந்து பத்து மணி முப்பது நிமிடத்திற்க வரும். சென்ற வாரமே முன் பதிவு செய்தாகிவிட்டது.

ஆ. 100 - க00, 120 - கஉ0, 150 - கரு0, 170 - கஎ0

35. அ. பள்ளிகள் மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதோடு நின்றுவிடுவதில்லை அதையும் தாண்டி கற்பிக்கின்றன. பள்ளிகளிலிருந்து மாணவர்கள் சில நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் சரியான முறையில் நடந்து/செயல்பட கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் முறை தவறி நடந்து கொள்ளும் போது பள்ளிகள் அவர்களை சரி செய்கின்றன (திருத்துகின்றன).

ஆ. 1) முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் (முயற்சி ஒரு போதும் தோற்காது)

2) கல்வி கரையில; கற்பவர் நாள் சில.

3) நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கும்

4) செய்யும் தொழிலே தெய்வம்.

36. பொருத்தமான கதை / கவிதை எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்

37. **திரண்ட கருத்து:**

மனிதர் அனைவரும் அன்புடன் வாழ வேண்டும். மனிதருடைய உளப்பாங்கு வானைப் போல பரந்து விரிவடைய வேண்டும். தன்னலம் என்னும் இருள் நீங்கி, அனைத்து மக்களும் ஓரினம் என்பதை உணர வேண்டும், மனதில் எழுந்த எண்ணத்தையெல்லாம் விளங்க வைக்க வேண்டும். புது வாழ்வு வாழ வேண்டும். இவையெல்லாம் நிறைவேற எல்லா இடங்களிலும் நூல் நிலையங்கள் உருவாக்க வேண்டும் என்பது பாவேந்தரின் கருத்தாகும்.

**பா வகை:** இப்பாடல் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்த வகையைச் சேர்நதது

**மோனை நயம்:** **ம**னிதரெலாம் - **ம**னோபாவம், **இ**னிதினிதாய் - **இ**லகுவது, **பு**னிதமுற்று - **பு**த்தகசாலை

**எதுகை நயம்**: ம**னி**தரெலாம் - த**னி**மனித - இ**னி**தினிதாய் - பு**னி**தமுற்று

**உருவக நயம்:** தன்னலத்தை இருளாக உருவகம் செய்துள்ளார் புரட்சிக்கவி.

38. வங்கிப் படிவம் சரியான முறையில் நிரப்பப்பட்டிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

39. 1. தமிழரசன் போல இருப்பது நல்லது.

2. எழிலனும் தமிழரசனைப் போல மற்றவர்களுக்கு உதவி செய்பவனாகவும் அன்போடும் நட்போடும் பழகுபவனாகவும் மாற வேண்டும்.

3. பொருத்தமான விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

39. ஆ. மாணவரின் விடை சூழலுக்குக்கேற்ப சரியானதாக இருந்தால் மதிப்பெண் வழங்கலாம்

(1. சரி, 2. நாம் நல்ல பண்புள்ளவர்களோடு பழக வேண்டும்)

40. கடிதம் - அனுப்புதல் - பெறுதல் - பொருள் - கடிதப் பொருள் - முடித்தல் - உறை மேல் முகவரி

41. கட்டுரை - கொடுக்கப்பட்ட உட்தலைப்புகளை ஒட்டி எழுதப்பட்டிருக்கும் கருத்துகளுக்கேற்ப மதிப்பெண் வழங்கலாம். (மழை நீர் சேகரிப்பு / சுற்றுச்சூழல் சீர்கேடும் பாதுகாப்பும்)